بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 12/05/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**இறை கட்டளைகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி மற்றும் ஜமாஅத்தின் மரபுகள் ஆகியவற்றின் ஒளியில் மஜ்லிஸே முஷாவரத் (எனும் ஆலோசனைக் கூட்டத்)தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தல்**

*பொறுப்பாளர்கள் மற்றும் ஷூரா உறுப்பினர்கள் ஆகியோரின் பொறுப்புகளைக் குறித்து அறிவுரைகள்*

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

فَبِمَا رَحۡمَۃٍ مِّنَ اللّٰہِ لِنۡتَ لَہُمۡ ۚ وَ لَوۡ کُنۡتَ فَظًّا غَلِیۡظَ الۡقَلۡبِ لَانۡفَضُّوۡا مِنۡ حَوۡلِکَ ۪ فَاعۡفُ عَنۡہُمۡ وَ اسۡتَغۡفِرۡ لَہُمۡ وَ شَاوِرۡہُمۡ فِی الۡاَمۡرِ ۚ فَاِذَا عَزَمۡتَ فَتَوَکَّلۡ عَلَی اللّٰہِ ؕ اِنَّ اللّٰہَ یُحِبُّ الۡمُتَوَکِّلِیۡنَ ﴿۱۶۰﴾

இவ்வசனத்தின் மொழியாக்கம் என்னவென்றால், "அல்லாஹ்விடமிருந்து உமக்கு வழங்க பெற்றுள்ள மகத்தான அருளின் காரணமாகவே நீர் அவர்களுக்கு மென்மை வாய்ந்தவராகத் திகழ்கின்றீர். தீய ஒழுக்கமும் கடின உள்ளமும் உடையவராக நீர் இருந்திருப்பின் அவர்கள் உம் சூழலில் இருந்து சிதறிச் சென்றிருப்பர். எனவே, நீர் அவர்களை மன்னித்து அவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்பு கோருவீராக! மேலும், ஒவ்வொரு முக்கிய விஷயங்களில் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக. பின்னர், நீர் எது பற்றியும் உறுதியான முடிவு எடுத்துவிட்டால் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பீராக. நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கை வைப்பவர்களிடம் உறுதியாக அன்பு கொள்கின்றான்." (திருக்குர்ஆன் 3:160)

இந்நாட்களில் பல்வேறு நாடுகளில் ஜமாஅத்தினுடைய ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சில நாடுகளில் நடந்த முடிந்து விட்டன; சில நாடுகளில் இனிமேல் நடக்க இருக்கின்றன. ஷூராவின் முக்கியத்துவம் குறித்தும் பிரதிநிதிகளின் பொறுப்புகளைக் குறித்தும் முன்பும் கூட நான் கவனமூட்டி இருக்கின்றேன். கவனமூட்டப்பட்டு சில வருடங்கள் கழிந்து விட்டன. ஆகவே, அல்லாஹ்வின் கட்டளை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி மற்றும் ஜமாஅத்தினுடைய மரபுகள், வழிமுறைகள் ஆகியவை குறித்து இன்று மீண்டும் எடுத்துக் கூறுவதை பொருத்தமானதாக நான் கருதுகிறேன். எங்கெல்லாம் ஆலோசனைக் கூட்டங்கள்

நடந்து முடிந்து விட்டனவோ அங்குள்ள பிரதிநிதிகளும், ஷூராவின் உறுப்பினர்களுடைய பொறுப்புகள் குறித்து கவனமூட்டப்படும் இவ்விஷயங்களில் இருந்து பயன் அடையலாம். ஷூராவின் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், மஜ்லிஸே ஷூராவின் பரிந்துரைகளுக்கு காலத்தின் கலீஃபா அனுமதி வழங்கிய பிறகு உறுப்பினர்களின் சில பொறுப்புகள் ஆரம்பமாகின்றன. ஆகவே, அவற்றை நிறைவேற்றுவதும் தம் பங்களிப்பை அளிப்பதும் ஷூராவுடைய ஒவ்வொரு பிரதிநிதிக்கும் கடமையாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் சிறப்பான அருளினால் தம் உம்மத்தினருக்கு மிக்க மென்மையான உள்ளம் உடையவர்களாகத் திகழ்ந்தார்கள் என்று இவ்வசனத்தில் சான்று அளிக்கப்பட்ட அதே வேளையில், பெருமானார் (ஸல்) அவர்களின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு எவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்களும், பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப அன்னாரின் ஊழியத்தில் வரக்கூடிய மஸீஹ் மவ்ஊது அவர்களின் மிஷனை பூர்த்தி செய்யக்கூடிய பொறுப்பு எவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்களும், அன்புடனும் நேசத்துடனும் மென்மையுடனும் பணியாற்ற வேண்டும் என்ற விஷயத்தின் பக்கம் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான்.

மென்மை காட்டவில்லை என்றால், கடுமையை வெளிப்படுத்தியிருந்தால், கோபப்படக் கூடியவராய் இருந்திருப்பார்கள் என்றால், இம்மக்கள் விலகிச் சென்று இருப்பார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே, மன்னிக்குமாறும் அவர்களுக்காக துஆ செய்யுமாறும், பரஸ்பரம் ஆலோசனை செய்யுமாறும் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். ஆக, இந்த அடிப்படையைக் கருத்தில் கொண்டவாறு இந்த போதனைக்குட்பட்டு ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. பெயருக்கு ஏற்ப இது ஆலோசனை கூறும் சபையாக உள்ளது; தீர்மானிக்கும் சபை அல்ல! ஆகவே, அல்லாஹ் கூறுகின்றான்: ஆலோசனைகளுக்கு பிறகு நீர் தீர்மானம் எடுத்து விட்டால், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு செயல்படுங்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இருந்தால் பிறகு அல்லாஹ் அதன் விளைவுகளையும் அளவற்ற அருள்களைக் கொண்டதாக ஆக்கி விடுவான்.

இறை நம்பிக்கையின் இந்த உயரிய உதாரணத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நாம் காண்கின்றோம். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பல விவகாரங்களில் அல்லாஹ்விடமிருந்து நேரடியாக வழிகாட்டல்கள் கிடைத்து வந்தன. ஆனால், அல்லாஹ்விடமிருந்து தெளிவான கட்டளைகள் கிடைக்காத விவகாரங்களில் பெருமானார் (ஸல்) கண்டிப்பாக ஆலோசனைகள் கேட்டு வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடைய இந்த நடைமுறையும் அல்லாஹ்வுடைய இந்த கட்டளையும் நமக்கு எதன் பக்கம் கவனமூட்டுகிறது என்றால், ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் இதர ஜமாஅத் உறுப்பினர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதன் பக்கமும், நாமும் பரஸ்பர ஆலோசனையுடன் பணியாற்ற வேண்டும் என்பதன் பக்கமும் கவனமூட்டுகிறது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீதுள்ள அல்லாஹ்வின் கருணை என்னவென்றால், கிலாஃபத் எனும் அருளை அவன் வழங்கி இருக்கின்றான்.

ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைக்கேற்பவும், பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கேற்பவும் காலத்தின் கலீஃபாவும் உலகிலுள்ள ஜமாஅத்துகளிடமிருந்து அங்குள்ள சூழ்நிலைக்கேற்ப ஆலோசனைகளைக் கேட்கிறார். அல்லாஹ் நாடியிருந்தால் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எல்லா விவகாரங்களிலும் வழிகாட்டல் வழங்கி இருப்பான். ஆனால், சில விவகாரங்களில் ஆலோசனை கேட்குமாறு அன்னாருக்கு கட்டளை இட்டிருப்பதும், பெருமானார் (ஸல்) அவர்கள் சில விவகாரங்களில் ஆலோசனை கேட்டிருப்பதும், உண்மையில் இவை நம்மை சரியான வழியில் நடத்துவதற்காகவும், பரஸ்பர நேசம் மற்றும் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்காகவும், சமுதாயத்தில் ஒற்றுமையை உருவாக்குவதற்காகவும் ஆகும்.

இதைக் குறித்து ஒரு ஹதீஸிலிருந்து விளக்கம் கிடைக்கின்றது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: شَاوِرْهُمْ فِي الْأَمْرِ 'முக்கிய விஷயங்களில் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக' எனும் வசனம் இறங்கிய போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வும் அவனது தூதரும் இதற்கு தேவையுடையவர்கள் இல்லை என்ற போதிலும் இதை எனது உம்மத்திற்கு அருளாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். ஆகவே, ஆலோசனை செய்யக்கூடியவர்கள் நேர்வழியை விட்டு இழப்பிற்குரியவர்களாக ஆக மாட்டார்கள். ஆனால், எவர்கள் ஆலோசனை செய்ய மாட்டார்களோ அவர்கள் இழிவை விட்டு தப்பிக்க முடியாது.

ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்களோ இந்த ஆலோசனைகளுக்கு தேவையுடையவர்களாக இருந்திருக்கவில்லை; தேவையற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்டு வந்தார்கள். அதன் மூலமாக உம்மத்திற்கு முன்னால் அந்த முன்மாதிரி நிலைபெற வேண்டும் என்பதற்காகவும், இந்த உம்மத் எப்பொழுதும் அல்லாஹ்வின் அருளில் இருந்து பங்கு பெறுவதற்காகவும், எப்பொழுதும் நேர்வழியின் வழிகளில் செல்வதற்காகவும், இழிவிலிருந்து தப்பி இருப்பதற்காகவும் அன்னார் அவ்வாறு செய்தார்கள்.

நம்மிடையே ஷூராவின் அமைப்பு தொடர்வது அல்லாஹ் நம் மீது செய்த சிறப்பான கருணையாகும். ஆகவே, ஒவ்வோர் அஹ்மதியும் பொதுவான முறையிலும், ஒவ்வொரு ஷூராவின் உறுப்பினரும் சிறப்பான முறையிலும் இதற்கு கண்ணியமளித்தவாறு, அல்லாஹ் நமது நேர்வழிக்கான ஏற்பாட்டை உருவாக்கியுள்ளான் என்பதற்காக அவனுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்பதற்கு மூன்று வழிமுறைகளை பின்பற்றினார்கள். அவற்றை கலீஃபாக்களும் தொடர்ந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அதன்படியே செயல்பட்டார்கள். ஒரு வழிமுறை என்னவென்றால், ஆலோசனை கேட்டுப் பெறுவதற்கு தகுதியான ஏதேனும் விவகாரம் முன் வந்தால், மக்கள் ஒன்று கூடுமாறு ஒருவர் அறிவிப்பு செய்த பிறகு மக்கள் ஒன்று கூடுவார்கள். அங்கு எடுத்துக் கூறப்படும் கருத்துக்களுக்கு, ஆலோசனைகளுக்கு ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் தீர்மானம் வழங்குவார்கள். இரண்டாவது வழிமுறை என்னவென்றால், ஆலோசனை கூற தகுதி உள்ளவர்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் எவர்களை கருதினார்களோ அவர்களை மட்டும் அன்னார் அழைப்பார்கள். பிறகு, அந்த சில நபர்களைக் கொண்ட சபையினரிடம் ஆலோசனை கேட்கப்படும். மூன்றாவது வழிமுறை என்னவென்றால், இரு நபர் கூட ஒன்று கூடக் கூடாது என பெருமானார் (ஸல்) அவர்கள் எப்போது கருதுகிறார்களோ அப்போது தனித்தனி நபராக அழைத்து ஆலோசனை கேட்பார்கள்.

"ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக ஒருவர் தம் தோழர்களிடம் ஆலோசனை கேட்டதாக நான் கண்டதில்லை" என்று ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆக, இவை அனைத்தும் எதற்காக என்றால், அல்லாஹ்விடமிருந்து நேரடியாக வழிகாட்டல் கிடைக்கப் பெற்ற அல்லாஹ்வின் நபி ஆலோசனை கேட்கும் போது, ஆலோசனையின் முக்கியத்துவத்தை நீங்கள் எந்த அளவுக்கு புரிவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று பாருங்கள்!

பத்ர் மைதானத்திலும் கூட சஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆலோசனை கூறியதற்கு பிறகு அதை செயல் ரீதியாக வெளிப்படுத்தியும் காட்டினார்கள். தம்முடைய உயிரை பணயம் வைத்தார்கள். ஆகவே, நம்முடைய ஷூராவின் உறுப்பினர்கள் நினைவில் வைக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நாம் இந்த ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்களுக்கான ஒப்புதல் கிடைத்த பிறகு அதன்படி செயலாற்ற எல்லாவித தியாகங்களையும் செய்ய வேண்டும்; எல்லாவற்றையும் விட முதலாவதாக தம்மைத் தாமே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கிலாஃபத் அமைப்பிற்கும், ஜமாஅத் அமைப்பிற்கும் உதவி செய்யக்கூடிய (ஷூரா எனும்) துறைக்கு உறுப்பினர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். ஆலோசனை கூறக்கூடியவர்களின் ஆலோசனைகள் நல்லெண்ணத்தை கொண்டதாகவும் இறையச்சத்தின் உயரிய தரங்களுக்கு ஏற்பவும் இருக்க வேண்டும். ஆகவே, இவ்வகையில் ஆலோசனை கூறக் கூடியவர்களுக்கு மிகப்பெரும் பொறுப்பு உள்ளது. அவர்களின் இறையச்சம் எந்த தரத்தை கொண்டதாக இருக்கிறது என்று அவர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு எந்த அளவுக்கு தெளிவுபடுத்துகிறது என்றால், அன்னார் கூறினார்கள்: شَاوِرُالْفُقَهَاءَ وَالْعَابِدِيْن "புரியும் திறன் கொண்ட, இபாதத் செய்யக்கூடிய மக்களிடம் ஆலோசனை கேளுங்கள்." ஒவ்வொரு நபரிடமும் கேட்க வேண்டியதில்லை! ஆக, பிரதிநிதிகளுக்கான தரம் இதுவாகும். பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் மக்களுக்கும் இதில் அறிவுரை உள்ளது. அது என்னவென்றால், தங்களுக்குள் எப்படிப்பட்ட மக்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால், வெளிப்படையான முறையில் அவர்கள் ஆலோசனை கூறும் தகுதி பெற்றவர்களாகவும், மார்க்க அறிவில் சிறந்தவர்களாகவும், இபாதத்தின் தரத்தில் சிறந்தவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த தரத்தை முன்னிறுத்தியவாறு எங்கெல்லாம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அந்த பிரதிநிதிகளின் ஆலோசனையில் ஒரு

தெளிவான வேறுபாடு தென்படுவதை நான் கண்டுள்ளேன். மக்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப தம் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கிறார்கள் என்றால், அதற்கேற்பவே தம் பிரதிநிதித்துவத்தின் உரிமையை அவர்கள் செலுத்துகிறார்கள் என்றே காலத்தின் கலீஃபாவும் புரிந்திருப்பார். பிரதிநிதிகள் தம் உரிமையை ஷூராவின்போதும் அதற்குப் பிறகும் செலுத்தவில்லை என்றால், அவர்கள் ஜமாஅத் மக்களின் நம்பிக்கையை காயப்படுத்துவதுடன் காலத்தின் கலீஃபாவுடனும் தம் அமானிதத்தின் உரிமையை செலுத்தாமல் நம்பிக்கை துரோகம் செய்பவர்களாக ஆகிவிடுகின்றனர்.

ஷூராவின் பிரதிநிதித்துவ (காலகட்ட)ம் ஒரு வருடத்திற்கானது ஆகும். அதில் நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு வழங்கியவாறு தீர்மானங்களின்படி தாமும் செயல்பட வேண்டும்; (மற்றவர்களை) செயல்பட வைக்கவும் வேண்டும். உங்களுடைய ஜமாஅத்தில் காலத்தின் கலீஃபாவுடைய தீர்மானங்களுக்கு ஏற்ப எந்த அளவுவுக்கு அமல் செய்யப்படுகிறது என்று எப்பொழுதும் கண்காணித்து வாருங்கள். சில சமயங்களில் பொறுப்பாளர்களுடைய சோம்பேறித்தனத்திற்கு தீர்மானங்கள் இரையாகி விடுகின்றன. எந்த அளவு செயல்படுத்தப்பட வேண்டுமோ அந்த அளவு செயல்படுத்தப்படாமல் இருக்கும். அவ்வாறான நிலையில் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுக்கும், தலைமையகத்திற்கும் கவனமூட்டுங்கள். இவ்வுலகத்தில் சாக்குபோக்குகளை கூறி தப்பி விடலாம். ஆனால், அல்லாஹ்விடம் எந்த விஷயமும் மறைவாக இல்லை. அமானிதங்களைக் குறித்து அவன் விசாரிப்பான் என்பதை நினைவில் வைத்திருங்கள். ஒரு பொறுப்பாளருடன் கருத்து வேறுபாடு தோன்றும்போதுதான் சில உறுப்பினர்கள் தலைமையகத்திற்கு தெரிவிக்கிறார்கள். இதுவும் சரியான விஷயமல்ல!

ஜமாஅத்துகளின் சார்பாக சில ஆலோசனைகள் மீண்டும் அனுப்பப்படுகின்றனவென்றால், அதன்படி அமல் செய்யப்படவில்லை என்றே பொருளாகும். அவ்வாறான ஜமாஅத்துகளும் பொறுப்பாளர்களும், 'இது இறையச்சத்தின் படி செல்லக்கூடிய வழிமுறையா? தம்முடைய அமானிதங்களுடைய உரிமையை செலுத்தக்கூடிய வழிமுறையா? கிலாஃபத்துக்கு கட்டுப்பட்டு தம் உறுதிமொழியை நிறைவேற்றக்கூடிய செயலா?' என்று சிந்திக்க வேண்டும். எங்களால் இதன்படி செயல்பட வைக்க முடியவில்லை என்று நாட்டினுடைய தலைமையகம் தம் வருத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆகவே, இவ்வருடம் நாங்கள் இதன்படி செயல்படுவோம்; அவ்வாறு செயல்பட வைக்கவில்லை என்றால், நாங்கள் குற்றவாளிகள் ஆவோம். தம் அமானிதங்களின் உரிமையை செலுத்தாத மக்களைச் சார்ந்தவர்களாக ஆகிவிடுவோம் என்று மன்னிப்பு கோரியவாறு, நாங்கள் இவ்வருடம் இந்த ஆலோசனையை எடுத்து வைப்பதற்கு பரிந்துரைக்கவில்லை என்று அவர்கள் இதை எழுத வேண்டும். இவ்வாறு எழுதும் போதுதான், நாங்கள் இதை செய்து விடுவோம்; அதை செய்து விடுவோம் என பெரும் பெரும் செயல் திட்டங்களை வகுத்து காலத்தில் கலீஃபாவின் முன்னால் நாம் எடுத்து வைக்கின்றோம். ஆனால், அதற்கேற்ப செயல்படாததால் குற்றவாளியாவோம்; காலத்தின் கலீஃபாவின் நம்பிக்கையை புண்படுத்தியவர்களாவோம் என்று நிர்வாகத்திற்கும் பிரதிநிதிகளுக்கும்

குறைந்தபட்சம் உணர்வாவது ஏற்படும். ஆக, இவ்வகையில் ஒட்டுமொத்த அளவில் ஆய்வு மேற்கொள்ளப்படும் அதேவேளையில், தனிப்பட்ட முறையிலும் பொறுப்பாளர்களும் ஷூராவின் பிரதிநிதிகளும் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்; இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். செயல்பட முடியாமல் போனதற்கான காரணங்களையும் எல்லா மட்டத்திலும் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆகவே, இந்த ஆய்வுப் பணிகள்தான் ஜமாஅத் அமைப்பை சரியான வழியில் நடத்த முடியும். இல்லை எனில், பேச்சுக்கள் எவ்வித பயனையும் தர முடியாது.

ஆகவே, நம்முடைய செயல் முன்மாதிரிகள், மக்களுடன் அன்பு நேசத்துடன் தொடர்பு வைத்தல், அவர்களின் வேதனைகளை உளப்பூர்வமாக உணர்தல், காலத்தின் கலீஃபாவுக்கு கட்டுப்படும் தரத்தை மேலோங்கச் செய்தல் ஆகியவை ஒவ்வொரு பொறுப்பாளர்கள் மற்றும் ஷூராவின் ஒவ்வொரு பிரதிநிதியின் தனித்துவமாக ஆகும்போதுதான் ஒட்டுமொத்த ஜமாஅத் அளவிலும் ஒரு புரட்சி ஏற்படுவதை நாம் காண்போம். நாம் நம் செயல் நிலைகளை சீர்படுத்துவதற்கு செயல்திட்டங்களை வகுக்கின்ற அதே வேளையில் ஏக இறைவனின் தூதுச் செய்தியை கொண்டு சேர்ப்பதற்காக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் உலகை கொண்டு வருவதற்காக எவ்வாறான செயல் திட்டங்களை வகுக்க வேண்டும் என்றால், அவை ஒரு புரட்சியை ஏற்படுத்தி விட வேண்டும். இதற்காகத்தான் ஷூராக்கள் நடத்தப்படுகின்றன.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டலின் ஒளியில், இறையச்சத்தின் படி நடந்தவாறு தம் பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்:* இறையச்சத்தின் படி நடந்தவாறு தம் பொறுப்புகளை நிறைவேற்றக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக! நம்முடைய தவறுகள், குறைபாடுகள், பலவீனங்கள் ஆகியவற்றை மறைத்தருளியவாறு எப்பொழுதும் தன் அருளால் நமக்கு வழங்கிக் கொண்டே செல்வானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**